**O.S.No. : 20/2025**

Dated :04.02.2026

**வா.சா.1 : அரிசிங் ; த/பெ. நஞ்சா கவுடர்**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. இந்த வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் 87/6A1-ன் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 59 சென்ட் என்றால் சரிதான். மேற்படி பழைய சர்வே எண் 87/6A1 என்பது 471/1, 471/2, 471/2A, 471/3, 471/4 முதல் 471/13 மற்றும் 471/14 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதனுடன் 471/15 என்றும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. நான் 25 சென்ட் பூமியை AM. ராஜுவின் மகன் AR. ராமச்சந்திரன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி 25 சென்ட் பூமியின் நான்கெல்லைகளாக கிழக்கில் கர்ணன் என்பவரது பூமியும், மேற்கில் ஹாலன் பூமியும், வடக்கில் அர்ஜுனன் பூமியும், தெற்கில் நஞ்சன் பூமியும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி நான்கு எல்லைகள் கொண்ட 25 சென்ட் பூமியைத்தான் நான் வழக்குரையில் அ செட்யூல் சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த அ செட்யூல் சொத்திற்கு வடக்கில் 15 அடி அகல வழிப்பாதை உரிமை என்று வழக்குரையில் ஆ செட்யூல் சொத்தினை காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால், நான் கிரையம் பெற்றுள்ள பத்திரமான வா.சா.ஆ.1 ஆவணத்தில் வடக்கில் அர்ஜுனன் பூமி உள்ளதாக காண்பிக்கப்பட்டது என்றால் சரிதான், எனது பூமிக்கான வழியானது கிழக்கு பக்கத்திலிருந்து வடக்கு நோக்கி வருகிறது. எனது அ செட்யூல் பூமிக்கு கிழக்கே வழிப்பாதை உரிமை உள்ளது என்பதை எனது வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல, காண்பித்துள்ளேன். நான் அவ்வாறு கிழக்கில் பாதை உள்ளது என்பதை காண்பிக்காமல் வழக்கிற்காக தற்போது புதிதாக கிழக்கில் பாதை உள்ளது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் எனது சொத்திற்கு பாதை உள்ளதாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான், நான் தம்பியிடம் பூமி வாங்கினேன், பக்கத்தில் உள்ள பூமி அவரது அண்ணன் உடையது, இருவருக்கும் ஒரே வழிதான், அந்த வழியானது இருவருக்குமான புரிதலில் விடப்பட்ட வழியாகும். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தற்போது கூறும் சங்கதியை கூறியுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் 30 வருடமாக அந்த பாதையைத்தான் நான் பயன்படுத்தி வருகிறேன். அவ்வாறு நான் 30 வருடங்களாக வழக்கில் கூறியுள்ள 15 அடி அகல பாதையை பயன்படுத்தி வருகிறேன் என்பதை காண்பிக்க ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை, ஆனால் பயன்படுத்தி வருகிறேன்.

4. நான் வழக்கில் கூறியுள்ளவாறு பழைய சர்வே எண் 87/6A1, புதிய சர்வே எண் 471/2A-ல் 15 அடி அகலமுள்ள நடைபாதை உரிமையானது தாவா அ செட்யூல் சொத்திற்கு வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ளது என்பதை காண்பிக்க ஏதாவது வருவாய் மற்றும் பஞ்சாயத்து ஆவணங்கள் உள்ளதா என்றால் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 கார்லேசன் சான்றிதழ் மற்றும் வா.சா.ஆ.3 அனுபவ சான்றிதழ் ஆகியவற்றை கிராம நிர்வாக அலுவலர் வழங்கியுள்ளார் என்றும், அவருக்கு அவ்வாறு சான்றிதழ் வழங்க அதிகாரம் இல்லை என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு யார் அனுபவத்தில் உள்ளார்கள் என்பதை நீதிமன்றம்தான் விசாரித்து தீர்ப்பு வழங்க முடியும் என்றால் நடைமுறை எவ்வாறு உள்ளதோ அவ்வாறு செய்யலாம். வா.சா.ஆ.3 ஆவணத்திலும் எனக்கு 15 அடி அகல வழி உரிமை உள்ளதாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

**(வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

L. Prakash

Digitally signed by L. Prakash
Date: 2026.02.04 12:53:47 +0530